03.02.2024

அ.வ.எண். 140-2019

வாசா.1 - சரோஜினி

1 முதல் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய சொந்த ஊர் காங்கேயம் பாளையம். நான் பிறந்ததில் இருந்து 21 வருடம் திருமணம் ஆகும் வரை காங்கேயம் பாளையத்தில் தான் வசித்து வந்தேன். காங்கேயம் பாளையத்தில் நான் வசித்த முகவரி 3/56, மதுரை வீரன் கோவில் வீதி, காங்கேயம்பாளையம். என் உடன்பிறந்தவர்கள் கலாமணி, ராஜேஸ்வரி, பூங்கொடி, நந்தகுமார் மற்றும் நான். ஜெகந்நாதன் என்னுடைய கணவர் அவரை திருமணத்திற்கு முன்பு எனக்கு தெரியாது. என்னுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். என்னுடைய திருமணம் இரு வீட்டார் முன்னிலையில் நடைபெற்றது. என்னுடைய திருமணம் நடந்த தேதி சரியாக தெரியவில்லை, ஆனால் செப்டம்பர் மாதம் 1994 ல் நடைபெற்றது. என்னுடைய திருமணம் பேரூர் அய்யாசாமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

திருமணம் நடைபெற்றதற்கான ரசீது கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. யாருடைய தலைமையில் நடந்தது என்றால் பத்திரிக்கை அடித்து பெரியோர்களை அழைத்து திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம். கூட்டுக்குடும்பமாக கருமத்தம்பட்டி எலச்சிபாளையத்தில் குடியிருந்தோம். திருமணம் ஆகி ஒரு வருடம் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். 1994 ஆண்டு செப்டம்பர் மாதம் நான் ரவி என்பவருடன் சேலத்தில் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. ஒரு வருடம் கூட்டுக் குடும்பமாக இருந்த பின்னிட்டு நான் எனது கணவரை விட்டு விட்டு சென்று விட்டேன் என்றால் இல்லை. என்னுடைய மகன் கோவை அரசு மருத்துவமனையில் பிறந்தார். அப்பொழுது ஜெகந்நாதன் குடும்பத்தார் என்னையும் எனது குழந்தையையும் வந்து பார்த்தார் என்றால் சரியல்ல, எனது கணவர் வந்து பார்த்தார்.

எனது கணவரை விட்டு பிரிந்த பின்னிட்டு நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் என் கணவரை விட்டு நான் பிரியவில்லை, குழந்தை பிறந்த பின்பு உடல்நல குறைவு

ஏற்பட்டதால் நான் என் பெற்றோருடன் வசித்து வந்தேன். 16.06.1995 ல் எனது மகன் பிறந்தார். அவரது பிறப்புச் சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர் வீட்டுக்கு நான் சென்ற பின்னிட்டு எனது கணவர் என்னை வந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல, வந்து பார்த்தார். எனது கணவருக்கு 1994 ல் ஒரு ஜோதிமணி என்பவருடன் திருமணம் நடந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.நான் என் தாயார் வீட்டுக்கு சென்று விட்டதன் முதல் எனது கணவர் ஜோதிமணியுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

எனது மகனை தற்பொழுது வரை நான் தான் பார்த்து வருகிறேன். எனது மகனை என் சகோதரி ராஜேஸ்வரி தான் வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மகன் தற்பொழுது ஏர் போர்சில் வேலையில் இருக்கிறார். எனது மகன் கடந்த 5 வருடத்திற்குள் தான் வேலையில் சேர்ந்துள்ளார். எனது மகனின் ஆதார் அட்டையில் உள்ளது வேறொரு முகவரி என்றால் சரியல்ல, தற்பொழுது எங்கு குடியிருக்கிறார் என்றால் சூலூர் ஏர் போர்சில் தான் குடியிருக்கிறார். என் மகனின் என் சகோதரி தான் வளர்த்து வந்தார் என்றும், அதனால் தான் வேலை செய்யும் முகவரி வேறு, ஆதார் அட்டையில் உள்ள முகவரி வேறு என்றால் சரியல்ல. நான், ஜெகந்நாதன் மற்றும் எனது மகன் சேர்ந்து புகைப்படம் எடுத்துள்ளோமா என்றால் எடுத்துள்ளோம், ஆனால் தற்பொழுது கைவசம் இல்லை.

ஜெகந்நாதன் எப்படி இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவரது இறுதி சடங்கு எலச்சிபாளையத்தில் சுடுகாட்டில் நடந்தது, எத்தனை மணிக்கு நடந்தது என்று தெரியாது. மேற்படி எலச்சிபாளையத்தில் நடந்த இறுதி சடங்கில் நானும் என் மகனும் கலந்து கொள்ளவில்லை. எனது கணவரின் இறப்புச் சான்றிதழ் கேட்டு நான் விண்ணப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த மனுவின் பெயரில் தான் இறப்புச் சான்றிதழ் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் இறப்புச் சான்றிதழ் கேட்டு மனுத்தாக்கல் செய்யவில்லை என்றும், ஜெகந்நாதனின் சகோதரர் தான் மனுத்தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. எனக்கு எப்படி எனது கணவர் இறந்தது தெரியும் என்றால் என்னுடைய கொழுந்தனாரின் மனைவியின் சித்தப்பா சொல்லி தெரியும், அவர் பெயர் எனக்கு தெரியாது.

அவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சொன்னார், அவரது தொலைபேசி எண் எனக்கு தெரியாது. எனது கணவர் இறந்தது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தாயார் வீட்டுக்கு நான் குழந்தை பெற்ற பின் சென்ற பொழுது எனது கணவர் அவ்வப்பொழுது வந்து செல்வார். அவருடைய பெயரிலும், என்னுடைய பெயரையும் சேர்ந்தது போல் என்னிடம் ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் குடும்ப அட்டை உள்ளது. குடும்ப அட்டையில் எனது கணவர் பெயர், என்னுடைய பெயர், எனது மகன் ஜெயப்பிரகாஷ் பெயர் சேர்ந்துள்ளது. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேடி எடுத்து தருகிறேன். ஜெகந்நாதனின் அடையாள அட்டை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் எதுவும் கொடுத்து வைக்கவில்லை.

அவர் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் யாரிடம் கொடுத்து வைத்திருப்பார் என்றால் அவரே தான் வைத்திருப்பார். தற்பொழுது நான் 3/56, காங்கேயம்பாளையம் முகவரியில் தான் வசித்து வருகிறேன். காங்கேயம் பாளையம் முகவரிக்குள், ஏர் போர்ஸ் முகவரி வராது என்றால் அது எனக்கு தெரியாது. நான் ஆரம்பம் முதலே 3/56 என்ற முகவரியில் தான் குடியிருக்கிறேன். என்னுடைய திருமணம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/சரோஜினி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2024.02.27 18:08:56 +0530

District Munsif
Sulur